
மே – 29

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## CCUDMA உருவாக்கம்




- தமிழக மாநில அரசானது ஏழு உறுப்பினர்களைக் கொண்ட சென்னை நகர நகர்ப்புற பேரிடர் மேலாண்மை ஆணையத்தினை (CCUDMA) அமைத்துள்ளது.
- இது 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் 41Aவது பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டது.
- சென்னை மாநகராட்சிக் கழக ஆணையர் (GCC) அதன் அதிகாரப்பூர்வ/பதவி வழித் தலைவராக இருப்பார்.
- சென்னை ஆட்சியர் இந்த CCUDMA ஆணையத்தின் பதவி வழித் துணைத் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- சென்னைப் பெருநகர காவல் ஆணையர், GCC துணை ஆணையர் (பணிகள்), GCC நகர சுகாதார அதிகாரி, சென்னைப் பெருநகர மேம்பாட்டு ஆணையத்தின் (CMDA) தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் சென்னை பிராந்தியத்தின் நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர் ஆகியோர் இந்தக் குழுவின் பதவி வழி உறுப்பினர்களாக இருப்பார்கள்.
- சென்னைக்கான குழுவின் உருவாக்கமானது, 2024 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மை (திருத்தம்) மசோதாவினை தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இந்த மசோதாவானது, மாநிலத் தலைநகரங்களுக்கும், மாநகராட்சி கழகத்தினைக் கொண்ட அனைத்து நகரங்களுக்கும் (டெல்லி மற்றும் சண்டிகர் ஒன்றியப் பிரதேசம் தவிர) "தனி நகர்ப்புறப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தினை" உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது.

## இந்தியாவின் முதல் யானைப் பாகன்கள் கிராமம்

- இந்தியாவில் முதல் முறையாக, முதுமலை புலிகள் வளங்காப்பகமான தெப்பக்காடு யானை முகாமில் யானைப் பாகன்களுக்காக என 44 வீடுகள் கட்டப்பட்டு, யானைப் பாகன்கள் கிராமம் அமைக்கப் பட்டுள்ளது.
- நீலகிரி மாவட்டத்தில் உள்ள முதுமலை புலிகள் வளங்காப்பகம் ஆனது, சுமார் 681 சதுர கிலோமீட்டர் வனப்பகுதியைக் கொண்டுள்ளது.

- முதுமலை புலிகள் வளங்காப்பகத்தில் உள்ள தெப்பக்காடு யானைகள் முகாம் ஆனது ஆங்கிலேயர் காலத்தில் நிறுவப்பட்டது.
- தெப்பக்காடு யானைகள் முகாம் ஆனது ஆசியாவின் பழமையான யானைகள் முகாம் ஆகும்.
- இந்த யானைகள் முகாமில் தற்போது 27 யானைகள் உள்ளன.
- இந்தியாவில் உள்ள யானைகள் முகாம்களில் யானைப் பாகன்களுக்கென எந்த ஒரு மாநில அரசும் வீடுகள் கட்டித் தரவில்லை.




## திருநர்களுக்கான சுயதொழில் உதவி

தமிழ்நாடு அரசு 2008-ல் இந்தியாவில் முதன்முதலாக திருநங்கை நல வாரியத்தை நிறுவியது.

இந்த வாரியம் திருநங்கைகள் மற்றும் திருநர்களின் உரிமைகள், சவால்கள், மற்றும் நலன்களுக்கான தீர்வுகளை கொண்டுவர திட்டமிடுகிறது.

திருநங்கை சமூக உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு, வீடமைப்பு, மருத்துவம் உள்ளிட்ட பல துறைகளில் உதவிகளை வழங்குகிறது.

திருநங்கைகளுக்கு சொந்த வீடுகள் வழங்க தமிழ்நாடு குடிசை நீக்க வாரியத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுகின்றன.

தனி வீடுகள் வழங்குவதோடு, அவர்கள் சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கான வீட்டு வசதிகளை உருவாக்க முனைவு.

தேவையில்லாத வீட்டு வாடகைச் செலவுகளிலிருந்து விடுபட திருநங்கைகள் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

திருநங்கைகள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு முழுமையான கல்வி செலவுகளை அரசு ஏற்றுக்கொள்கிறது.

உயர் கல்வியில் சேர விரும்பும் மாணவர்களுக்கு அரசு வழங்கும் கல்வியுதவித்தொகைகள் மற்றும் கோச்சிங் வகுப்புகள் போன்ற சேவைகள் கிடைக்கின்றன.

கல்வி மூலம் திருநங்கைகள் தங்களை செல்வாக்குடையவர்களாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

திருநங்கைகள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு முழுமையான கல்வி செலவுகளை அரசு ஏற்றுக்கொள்கிறது.

உயர் கல்வியில் சேர விரும்பும் மாணவர்களுக்கு அரசு வழங்கும் கல்வியுதவித்தொகைகள் மற்றும் கோச்சிங் வகுப்புகள் போன்ற சேவைகள் கிடைக்கின்றன.


கல்வி மூலம் திருநங்கைகள் தங்களை செல்வாக்குடையவர்களாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

- 2021 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட சுயதொழில் உதவியால் 800க்கும் மேற்பட்ட திருநர்கள் பயனடைந்துள்ளனர்.
- திருநர்கள் நல வாரியம் மூலம் ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் ஒதுக்கி 50,000 ரூபாய் வரை சுயதொழில் உதவி வழங்கப்படுகிறது.

- மாநில அரசு திருநர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியத்தை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தியுள்ளது.

## சின்னங்கள் மற்றும் பெயர்கள் (தவறான பயன்பாட்டைத் தடுத்தல்) சட்டம், 1950

- தனிநபர்கள்/ தனியார் நிறுவனங்கள் ஆகியவை இந்திய ஆணழகர்/மிஸ்டர் இந்தியா, தென்னிந்திய ஆணழகர்/மிஸ்டர் சவுத் இந்தியா போன்ற பட்டங்களை வழங்குவதைத் தடுப்பதற்கு சென்னை உயர் நீதிமன்றம் மறுத்து விட்டது.
- உடற்கட்டுக் கோப்பு வீரர்கள் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்படும் இத்தகையப் பட்டங்கள், 1950 ஆம் ஆண்டின் சின்னங்கள் மற்றும் பெயர்கள் (தவறான பயன்பாட்டைத் தடுத்தல்) என்ற சட்டத்தின் 3வது பிரிவினை எந்த வகையிலும் மீறாது என்றும் அது கூறியது.
- 1950 ஆம் ஆண்டு சட்டம் ஆனது, எந்தவொரு வர்த்தகம், வணிகம், தொழில் அல்லது தொழில்முறை, அல்லது எந்தவொரு காப்புரிமையின் பேரில், அல்லது எந்தவொரு வர்த்தக முத்திரை அல்லது வடிவமைப்பில் அல்லது இச் சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள எந்தவொரு பெயர் அல்லது சின்னம் அல்லது அதன் எந்தவொரு வண்ணமயமான சாயலிலும், மத்திய அரசின் முன் அனுமதியின்றி, நாட்டின் பெயர் அல்லது சின்னத்தைப் பயன்படுத்துவதைத் தடை செய்கிறது.





## 2025 நிதியாண்டில் மூலதனச் செலவினம்

- 2025 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் மூலதனச் செலவினமானது 16 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்து 46,076.54 கோடி ரூபாயாக இருந்தது.
- இது 2024 ஆம் நிதியாண்டில் 39,540.90 கோடி ரூபாயாக இருந்தது.
- 2025 ஆம் நிதியாண்டில் தற்காலிக மூலதனச் செலவினமானது, 2018-2024 ஆம் நிதி ஆண்டில் பதிவான 12.3 சதவீதம் என்ற ஒரு கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தினை (CAGR) விட மிகச் சிறப்பாக பதிவானது.
- 2025 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு நிதிநிலை ஒதுக்கீடு இலக்கில் 95.2 சதவீதத்தினை எட்டியுள்ளது.
- இது 2024 ஆம் நிதியாண்டில் பதிவான 86.2% மற்றும் 2023 ஆம் நிதியாண்டில் 95.4

சதவீதத்தினை விடவும், 2018-2024 ஆம் நிதியாண்டுகளில் பதிவான 88.1 சதவீதத்தினை விடவும் மிகவும் சிறப்பாக உள்ளது.

- 2026 ஆம் நிதியாண்டில், மாநில அரசானது சுமார் 57,231 கோடி ரூபாய் மூலதனச் செலவினத்தினை மதிப்பிட்டுள்ளது.
- இது 2025 ஆம் நிதியாண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து 22.38% வளர்ச்சி ஆகும்.
- நிகரக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் உட்பட மாநிலத்தின் மொத்த மூலதனச் செலவினம் 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை ஒதுக்கீட்டு மதிப்பீடுகளில் 65,328 கோடி ரூபாயாக மதிப்பிடப் பட்டுள்ளது.





## PKM1 - முருங்கை வகை

- PKM1 எனப்படும் மொரிங்கா ஒலிஃபெராவின் ஒரு வகையானது, உலகளவில் குறிப்பாக ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள செனேகல், ருவாண்டா மற்றும் மடகாஸ்கர் போன்ற நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- இந்த மரத்தின் இலைகள் மற்றும் பூக்கள் இந்த நாடுகளில் உள்ள குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராட உதவும் என்று நம்பப்படும் பெரு நுண்ணூட்டச்சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்களை வழங்குகின்றன.
- PKM1 அறிமுகமாவதற்கு முன்பு, இந்தியாவில் சுமார் ஆறு உள்நாட்டு/பூர்வீக வகை முருங்கை இருந்தன.
- இந்த வகையின் அனைத்து மரங்களும் 30 ஆண்டுகள் வரை உயிர் வாழும் என்பதால் இந்த வகைகள் அழியாதப் பயிர்கள் ஆகும்.
- 1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பெரிய குளத்தில் உள்ள தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தால் PKM1 வகை அறிமுகப்படுத்தப்பட்டது.
- உள்நாட்டு/பூர்வீக இனத்தைப் போலல்லாமல், PKM1 ஆறு அடி உயரம் வரை மட்டுமே வளரும், எனவே பறிப்பதற்கு இது எளிதானது.
- உலக முருங்கை உற்பத்தியில் தமிழ்நாடு சுமார் 24% பங்கும் மற்றும் இந்தியாவில் மிகப்பெரிய உற்பத்தியாளராகவும் உள்ளது.
- தேனி, திண்டுக்கல் மற்றும் கரூர் போன்ற மாவட்டங்கள் முருங்கை சாகுபடிக்கு நன்கு


பெயர் பெற்றவை.

❖ முருங்கை வளரும் முக்கிய மாவட்டங்களான மதுரை, தேனி, திண்டுக்கல், தூத்துக்குடி, அரியலூர், திருப்பூர் ஆகியவை 'முருங்கை ஏற்றுமதி மண்டலமாக' அறிவிக்கப்பட உள்ளன.




# தேசியச் செய்திகள்

## கொங்கன் இரயில்வே இணைப்பு




❖ கொங்கன் இரயில்வே கழக லிமிடெட் (KRCL) நிர்வாகத்தினை இந்திய இரயில்வே நிர்வாகத்துடன் இணைக்க மகாராஷ்டிரா அரசு ஒப்புக் கொண்டுள்ளது.


❖ கொங்கன் இரயில்வே (KR) நிர்வாகமானது, 1990 ஆம் ஆண்டில் இரயில்வே துறை அமைச்சகத்தில் ஒரு சிறப்பு நோக்கப் பிரிவாக நிறுவப்பட்டது.

❖ பாறைகள் நிறைந்த மேற்குத் தொடர்ச்சி மலைகள் வழியாக இரயில் பாதைகளை அமைக்கும் மிக கடினமான பணியை மேற்கொள்வதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

❖ 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அதிகாரப்பூர்வமாக செயல்படத் தொடங்கிய இந்த இரயில் பாதை திட்டமானது, மகாராஷ்டிராவில் உள்ள ரோஹா, கோவா, கர்நாடகாவில் உள்ள மங்களூரு மற்றும் கடலோரக் கேரளாவை இணைக்க முயன்றது.

❖ இந்திய அரசு 51% பங்குகளையும், மகாராஷ்டிரா 22%, கர்நாடகா 15% மற்றும் கோவா மற்றும் கேரளா தலா 6% பங்குகளையும் கொண்டு KRCL ஆனது ஒரு கூட்டுத் துணிகர முதலீட்டு முயற்சியாக உருவாக்கப்பட்டது.

## புதிய கோவிட்-19 மாற்றுரு NB.1.8.1




❖ தமிழ்நாடு மற்றும் குஜராத் மாநிலத்தில் புதிய கோவிட்-19 வைரசின் NB.1.8.1 மற்றும் LF.7 எனப்படும் புதிய துணை வகைகள் கண்டறியப்பட்டுள்ளது.

❖ இந்த JN.1 மாற்றுருவின் துணை வரிசைகளான NB.1.8.1 மற்றும் LF.7 ஆகிய இரண்டும் இந்தியாவில் மிகவும் அதிகம் பரவும் வகையாக உள்ளது.

❖ NB.1.8.1 ஆனது A435S, V445H மற்றும் T478I எனப்படும் சில குறிப்பிடத்தக்க முள் புரதப் பிறழ்வுகளைக் கொண்டுள்ளது.

❖ JN.1 வரிசை முழுவதுமே L455S பிறழ்வைக் கொண்டுள்ளது.


# பொருளாதாரச் செய்திகள்

## 2024–25 ஆம் ஆண்டில் நிகர அந்நிய நேரடி முதலீடு


❖ 2024-25 ஆம் ஆண்டில் இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு (FDI) வரவு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு 96% சரிந்தது.

❖ 2024-25 ஆம் ஆண்டில் நிகர FDI ஆனது சுமார் 0.4 பில்லியன் டாலராக மிதமான அளவில் இருந்தது என்பதோடு இது ஓராண்டிற்கு முன்பு 10.1 பில்லியன் டாலராக இருந்தது.

- 2024-25 ஆம் ஆண்டில், இந்தியாவிலிருந்து அயல்நாடுகளில் மேற்கொள்ளப் படும் /வெளியேறும் நிகர FDI (OFDI) ஆனது ஆண்டிற்கு 75% அதிகரித்து சுமார் 29.2 பில்லியன் டாலராக இருந்தது.
- சிங்கப்பூர், அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம், மொரிஷியஸ் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து OFDI அதிகரிப்பில் பாதிக்கும் மேற்பட்ட பங்கைக் கொண்டு இருந்தன.
- இதற்கிடையில், 2023 ஆம் நிதியாண்டில் 44.5 பில்லியன் டாலராக இருந்த வெளியேறும் மற்றும் திரும்பப் பெறப்பட்ட முதலீடுகள், 2025 ஆம் நிதியாண்டில் 15.7% அதிகரித்து 51.5 பில்லியன் டாலராக உயர்ந்தது.
- 2023 மற்றும் 2024 ஆம் நிதியாண்டில் 71 பில்லியன் டாலருக்கும் சற்று அதிகமாக தேக்க நிலையில் இருந்த மொத்த FDI உள்வரவு ஆனது, 2025 ஆம் நிதியாண்டில் சுமார் 13.7% அதிகரித்து 81 பில்லியன் டாலராக உயர்ந்தது.
- 2022 ஆம் நிதியாண்டில், இந்தியாவிற்கான FDI வரவு 84.83 பில்லியன் டாலராக இருந்தது.




## உலகின் 4வது பெரிய பொருளாதாரம் 2025





- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான உலக

பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கையின்படி, 2025 ஆம் ஆண்டின் இறுதியில் (2025-26 ஆம் நிதியாண்டு) இந்தியா உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாக மாறும்.

- இந்தியாவானது அமெரிக்கா, சீனா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அடுத்த படியாக மட்டுமே பின்தங்கியிருக்கும்.
- சில ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியா ஐக்கியப் பேரரசினை முந்தி ஐந்தாவது பெரிய நாடாக மாறியது.
- கணிப்பின் படி, இந்தியாவின் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2014 முதல் 2025 ஆம் ஆண்டு வரை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.
- இது ஒரு தசாப்தத்தில் பதிவான 105% வளர்ச்சியாகும்.
- மேலும் 2025 ஆம் ஆண்டில் இந்தியா 4 டிரில்லியன் டாலர்கள் மதிப்பிலான ஒரு பொருளாதாரமாக மாறும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அரிதான சுதந்திரமாகச் சுற்றித் திரியும் கடல் நூற்புழு



- தமிழ்நாட்டின் மணல் நிறைந்த கடற்கரையில் சுதந்திரமாக சுற்றித் திரியும் ஒரு புதிய வகை கடல் நூற்புழு எனப்படும் ஒரு சிறிய புழு போன்ற உயிரினத்தை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் புதிய இனம் ஆனது, ஃபெரோனஸ் ஜெயராஜ்புரி தத்தா & ரிஸ்வி, 2025 எனப் பெயரிடப்பட்டது.
- இது அரிதான நூற்புழுக்களின் குழுவான ஃபெரோனஸ் இனத்தைச் சேர்ந்தது.
- சுதந்திரமாக சுற்றித் திரியும் கடல் நூற்புழுக்கள் கடல் வளத்தின் ஆரோக்கியத்திற்கு முக்கியமானவை மற்றும் கடலோரச் சுற்றுச்சூழல் அமைப்புகளின் நிலைக்கு முக்கிய குறிகாட்டிகளாக செயல்படுகின்றன.
- சமீபத்திய ஒரு கண்டுபிடிப்புக்கு முன்பு, ஃபெரோனஸ் இனத்தில் இரண்டு இனங்கள் மட்டுமே அறியப்பட்டன.
- அவற்றுள் ஒன்று 1966 ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவிலும் மற்றொன்று 2015 ஆம் ஆண்டில் சீனாவிலும் கண்டறியப்பட்டது.


# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகின் விலங்கு சுகாதார அறிக்கை

- உலகின் விலங்குகள் சுகாதார அறிக்கையின் முதல் நிலை அறிக்கையினை உலக

விலங்கு சுகாதார அமைப்பு (WOAH) வெளியிட்டுள்ளது.

- தொற்றக்கூடிய விலங்கு நோய்கள் இது வரையில் பாதிக்கப்படாத பகுதிகள் மற்றும் உயிரினங்களுக்கும் பரவி வருகின்றன.
- இதில் கிட்டத்தட்டப் பாதியளவு நோயானது (47 சதவீதம்) விலங்குகளுக்கு இடையில் பரவும் திறன் கொண்டவையாக உள்ளன.
- மீன் வளர்ப்பில் பயன்படுத்தப்படும் நுண்ணுயிர் கொல்லி/எதிர்ப்பிகளில் சுமார் 15.8% ஃப்ளோரோக்வினொலோன்கள் ஆகும்.
- விலங்குகளில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக வேண்டி நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பயன்படுத்துவதாக சுமார் 20% நாடுகள் தெரிவித்துள்ளன மேலும் 7% நாடுகள் கொலிஸ்டின் மற்றும் என்ரோஃப்ளோக்சசின் போன்ற அதிக முன்னுரிமை மிக்க சில மருந்துகளைப் பயன்படுத்துகின்றன.
- 2050 ஆம் ஆண்டிற்குள், நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பு (AMR) தன்மையானது சுமார் 2 பில்லியன் மக்களின் உணவுப் பாதுகாப்பில் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் மற்றும் 100 டிரில்லியன் டாலர் மதிப்பிலான உலகளாவியப் பொருளாதார இழப்பை ஏற்படுத்தும்.




# இதரச் செய்திகள்

## உலகின் முதல் 10 பரபரப்பான விமான நிலையங்கள்

| Rank | Airport Name | Located In | Total Passengers |
|---|---|---|---|
| 1 | Hartsfield–Jackson Atlanta (ATL) | Atlanta, USA | 108,067,766 |
| 2 | Dubai International (DXB) | Dubai, UAE | 92,331,506 |
| 3 | Dallas/Fort Worth (DFW) | Dallas/Fort Worth, USA | 87,817,864 |
| 4 | Tokyo Haneda (HND) | Tokyo, Japan | 85,900,617 |
| 5 | London Heathrow (LHR) | London, UK | 83,884,572 |
| 6 | Denver International (DEN) | Denver, USA | 82,358,744 |
| 7 | Istanbul Airport (IST) | Istanbul, Turkey | 80,073,252 |
| 8 | Chicago O'Hare (ORD) | Chicago, USA | 80,043,050 |
| 9 | Indira Gandhi Intl. (DEL) | New Delhi, India | 77,820,834 |
| 10 | Shanghai Pudong (PVG) | Shanghai, China | 76,787,039 |

- 2025 ஆம் ஆண்டில் உலகளாவியப் பயணிகள் போக்குவரத்து ஆனது 9.9 பில்லியனை

எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- ஹார்ட்ஸ்ஃபீல்ட்-ஜாக்சன் அட்லாண்டா சர்வதேச விமான நிலையம் ஆனது 2024 ஆம் ஆண்டில் பயணிகள் போக்குவரத்தில் உலகின் மிகவும் பரபரப்பான ஒரு விமான நிலையம் என்ற பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- அதனைத் தொடர்ந்து துபாய் சர்வதேச விமான நிலையம் இடம் பெற்றுள்ளது.
- அமெரிக்காவின் டல்லாஸ்/ஃபோர்ட் வொர்த் (DFW) விமான நிலையம் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- புது டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் 9வது இடத்தைப் பிடித்தது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★